# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No. C.C.5/2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.1 |
| Name | : | பாலு |
| Father's Name | : | கன்னியப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 30.06.2025.

எதிரி ஆஜர்.

<u>குறுக்கு விசாரணை</u>

எதிரியை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் கடந்த 10 முதல் 15 ஆண்டுகளாக தெரியும். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான்தற்போது சென்னை எம்.டி.சி போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். எதிரியும் எம்ட.டி.சி போக்குவரத்து கழகத்தில்தான் வேறு கிளையில் பணிபுரிந்து வருகிறார். எதிரியை எனக்கு ஒரு முத்தரசன் என்பவர்தான் அறிமுகப்படுத்தி வைத்தார் என்றால் இல்லை. அதற்கு முன்பே எனக்கு

பழக்கம் உண்டு. எதிரியும், நானும், முத்தரசன் ஆகியோர்கள் நண்பர்கள் என்றால் இல்லை. ஒரே இடத்தில் வேலை பார்த்ததால் தெரியும். முத்தரசன் என்பவர் எனது பனிமனையில்தான் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி முத்தரசன் என்பவருக்கும் எனக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்துவந்ததா என்றால் இல்லை. முத்தரசன் என்பவருக்கும், எனக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்தது அதனால்தான் அவர்மீது மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. சரியான ஆவணங்கள் ஏதும் இல்லாததால் முத்தரசனுக்கு எதிராக கொடுக்கப்பட்ட புகாரில் உண்மை இல்லையென்று கூறி உரிய நீதிமன்றத்தில் சென்று பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள் என்றால் சரியல்ல. அதனால் மேற்படி முத்தரசனை நான் அடி ஆட்களை வைத்து மிரட்டினேன் என்றால் சரியல்ல. மேற்படி முத்தரசன் எதிரியிடம் நான் திட்டுவதாகவும், அதனால் காசோலை ஒன்று கேட்டதன்பேரில் எதிரி அவரது காசோலையை முத்தரசனிடம் கொடுத்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கும் எனக்கும் எந்தவித கொடுக்கல் வாங்கல் இல்லையென்றாலும் எதிரி எனக்கு அதன்பேரில் எந்தவித காசோலையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி முத்தரசன் எதிரியிடம் வாங்கிய காசோலையைதான் என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி நான் கொடுத்த தொந்தரவினால்தான் மேற்படி முத்தரசன் என்பவர் உடல்நிலை பாதிக்கப்பட்டு இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. அவருக்கு சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டு இறந்துவிட்டார். மேற்படி முத்தரசன் இறந்த பிறகு எதிரியிடம் சென்று முத்தரசன் வாங்கிய கடனை நீதான் திருப்பி கொடுக்கவேண்டும் என்று கூறினேன் என்றால் சரியல்ல. காசோலை திருப்பப்பட்டது தொடர்பாக எதிரியை கடன் கேட்டு எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் எனக்கு தேதி எனக்கு ஞாபகம் இல்லை. எதிரிக்கு மேற்படி அறிவிப்பில் எதற்காக அனுப்பினேன் என்று படித்து பார்த்தேனா என்றால் நான் காசோலை மோசடி தொடர்பாகவும் பணத்தை திருப்பி கேட்டும் அனுப்பினேன். மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்ட எதிரி என்னை அனுகியபோது நான் நீதான் முத்தரசன் வாங்கிய கடனை அவரது குடும்பத்தாரிடமிருந்து பெற்று கொடுக்கவேண்டும் என்று கூறினேன் என்றால் சரியல்ல. அதனால்தான் நான் எதிரியிடம் முத்தரசனிடம் இருந்து பண்ததை பெற்றுகொடுத்தால்போதும் பதில் அறிவிப்பு ஏதும் அனுப்ப வேண்டியது இல்லையென்று கூறினேன் என்றால் சரியல்ல. அதற்கு எதிரி நான் முத்தரசன் குடும்பத்தாரிடம் பணத்தை பெற்று கொடுக்க முடியாது என்று கூறியதால் நான் எதிரி கொடுத்த காசோலையை வைத்து அவருக்கு எதிராக காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி காசோலையை கொடுத்தபோது அது நிரப்பப்பட்டு கையொப்பம் செய்யப்பட்டிருந்தது. காசோலை கொடுத்த தேதி 01.04.2023 ஆகும். எதிரி எந்தவொரு காசோலையையும் கொடுக்கவில்லை. அவ்வாறு கொடுத்திருந்தால் அசல் மற்றும் வட்டி தொகையை நிரப்பி கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை எதிரி முத்தரசனிடம் கொடுத்த காசோலையை வைத்து நான் இந்த வழக்கை எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி குற்றவாளி இல்லை. முத்தரசனுக்கு பதிலாக எதிரியை பழிவாங்கிவிட்டேன் என்றால் சரியல்ல.